## கடவுள் வாழ்த்து

பிள்ளையார் சுழியும்,
பிறைசடையார் அருளும்,
பிரம்மாவின் பேராற்றலும்,
பெருமாள் நினைவும்,
பராசக்தி பாசமும்,
அஷ்டலட்சுமி வாசமும்,
ஆயகலைவாணி கடாட்சமும்,
முருகக் கடவுள் கருணையும்,
குலதெய்வத்தின் துணையும்,
பெற்றோர் ஆன்றோர் சான்றோர் ஆசியும்,
உற்றார் உறவினர் சுற்றத்தார் நட்பும்,
கணப்பொழுதும் நீங்காதிருக்க
நித்தம் நித்தம் சிந்தனை செய் நெஞ்சமே!..
****************************************

ஜனனீ ஜன்ம சௌக்யானாம்
வர்த்தனீ குல சம்பதாம்
பதவீ பூர்வ புண்யானாம்
லிக்யதே ஜன்ம பத்ரிக்கா
******************************

பலாநி க்ரஹ சாரேண
ஸூசயந்தி மநீஷிண
கோ வக்தா தாரதம்யஸ்ய
தமேகம் வேதஸம் விநா
*******************************

## கிரக வாழ்த்து

அஸ்வினியாதி நட்சத்திர
அதிசய எல்லையில் உலவும் கோள்களே!
ஆறறிவு மனித இனத்தின்
வாழ்க்கையை வடிவமைக்கும் கோள்களே!
அணுக்கணமும் மறவாமல் போற்றிடுவோம்
அல்லல் நீக்கி ஆதரித்தருள்வீரே!..
*****************************************

## ஜோதிட வாழ்த்து

புதிரான எதிர்காலச் சூழலைப்
புரிய வைப்பவளே!
கதிராதிக் கோள்களால் பலன்
அறிய வைப்பவளே!
விதியாலே வேதனைகள் சூழ்ந்தாலும்;
மதியாலே மலர்ச்சியுற வைப்பவளே!
காலக்கணிய ஒப்பறிவியல் தாயே! உனக்கு
கோடானக் கோடிப் போற்றிகள்!
*****************************************

ஜாதகத்தால் ஏற்படும்
சகல தோஷங்கள், இவ்வுலகில் செய்யும்
தவறுகளால் ஏற்படும் சாபக்கேடு,தீவினைகள்
நீங்கி,
நீங்காத தெய்வசிந்தனையுடன்,
எல்லாவகை இன்பமும் பெற்றுவாழ
இறைவனை வேண்டிக்கொள்கிறோம்!..
**********************************

வாழ்க வாழ்க
வளமுடன் வாழ்க!..
வாழ்க வாழ்க
வாழ்வாங்கு வாழ்க!..
*********************